மாகாணக் கல்வித் திணைக்களம் சப்ரகமுவ - வாராந்த பாடசாலை

வாரம் – 2 (25th Jan - 29th Jan 2021 )

பாடம் – ICT

தரம் - 10

Prepared by- D.PRAGASH
KG/DEWHI/SARASWADHI TMV MIYANAWITA

## பகுதி-1

**01 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1 2 3 4 என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதனை விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு ஏற்ப குறிக்குக.**

**01)** தரவு (data) தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A : கணினிச் செயன்முறைப்படுத்தலுக்கான மூலக் கூறுகள் தரவாகும்.

B : தனித்தனியாக எடுத்து கருத்து அளிக்கப்பட முடியாதவை தரவாகும்.

C : செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டவை தரவாகும்.

தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் மிகச் சரியான கூற்றுக்களாவன.

(1) Aயும் Bயும் மட்டும்

(2) Aயும் Cயும் மட்டும்

(3) Bயும் Cயும் மட்டும்

(4) A,B,C ஆகியன

**02)** தரவுகளை ஒழுங்குமுறையாக்கும் போது .........................பெறப்படும்.

(1) அட்டவனை (2) தகவல் (3) தகவல் தொழிநட்பம் (4)தொடர்பாடல்.

**03**) பண்பறி தகவலொன்றின் இயல்பு பின்வருவனவற்றுள் எது?

(1) வேகம் (2) கருத்தற்றது (3) முழுமையானது (4) மேற்கூறிய எதுவுமன்று

**04)** தொகுதி (system) ஒன்றின் பிரதான கூறு அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

(1) உள்ளீடு செய்தல் ( Input )

(2) மாற்றீடு செய்தல் (Substitute)

(3) முறைவழிப்படுத்தல் (Processing)

(4) வெளியிடல் (Output)

**05**) மின்னரசாங்கம்( e – government) தொடர்பாக பின்வருவனவற்றுள் சரியான கூற்று

A: அரசாங்க தகவல் நிலையச் சேவைகளைப் பட்டியல்படுத்தல்

B: அரச நிறுவனங்களின் சேவைகளை இலகுபடுத்தல்

C: வாகன உத்தரவுச் சீட்டுக்களைப் புதுப்பித்தல்

(1)Aயும் Bயும் மட்டும் (2) Aயும் Cயும் மட்டும் (3) Bயும் Cயும் மட்டும்

(4)A,B,C ஆகியன

**06)** முதலாம் தலைமுறை கணினிகள் தொடர்பாக பின்வருவனவற்றுள் சரியான கூற்றுக்கள்

A: சுற்றுக்களுக்காக வெற்றிடக் குழாய்கள் ( vacuum tubes ) பயன்படுத்தப்பட்டன.

B: தரவு முறைவழியாக்க வேகம் அதிகரித்து காணப்பட்டமை

C: கணினியின் பருமன் (size) அதிகரித்து காணப்பட்டமை

1) Aயும் Bயும் மட்டும் (2) Aயும் Bயும் மட்டும் (3)Bயும் Cயும் மட்டும் (4) A,B,C ஆகியன.

**07)** கணித்தல் வேலைகளுக்காக முதன் முதலில் உருவாக்கப்பட்ட கணினிக் கருவி எது?

(1) எண்சட்டம் ( Abacus) (2) கூட்டற்பொறி ( Adding machine )

(3) நெசவுப் பொறி(Mechanical loom) (4) பகுப்பாய்வுப் பொறி ( Analytical Engine )

**08**) கணினிச்சந்ததியின் பரிணாம வளர்ச்சியுடன் குறைவடைந்து செல்லும் இயல்பு எது?

(1) கதி (2) பல்திறமை (3) செம்மை (4) பருமன்

**09)** UNIVAC எத் தலைமுறைக் கணினியைச் சேர்ந்ததாகும்?

(1) 1ம் (2) 2ம் (3) 3ம் (4) 4ம்

**10)** ஒருங்குச்சேர்ப்பு மொழி எத்தலைமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்பட்டதாகும்?

(1) 1ம் (2) 2ம் 3) 3ம் (4) 4ம்

**11)** கணினியின் பண்பு அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

(1) இயக்கு திறன் (2) பல்திறமை (3) உணர்வு அதிகம் (4) செம்மை

**12**) அதியுயர் ஆற்றல்மிக்க கணினி வகை பின்வருவனவற்றுள் எது?

(1) பெருமுகக் கணினிகள் ( Mainframe computer )

(2) சிறு கணினிகள் ( Mini computer)

(3) மீன் கணினிகள் (Super computer)

(4) நுண் கணினிகள் (Microcomputer)

**13**) ஒத்திசைக் கணினிகளுக்கு ( Analog Computers ) உதாரணமாக அமைவது எது?

(1) மின் இதயவரைப் பொறி (ECG) (2) மேசைமேல் கணினி (destop computer)

(3) மடிமேல் கணினி (Laptop computer) (4) கதிமானி ( speedometer)

**14)** UPS (Uninterruptible power supply) ஒன்றின் பயன்?

(1) கணினிக்குத் தேவையான மினசாரத்தினை தொடர்ச்சியான வழங்குதல்.

(2) கணினியினுள் புகும் நச்சு நிரல்களினைக் (virus) கண்டறிந்து அழித்தல்

(3) கணினியினை இடைவிடாது குளிர்வித்தல் ( Cooling)

(4) மின் தடைப்பட்ட வேளைகளில் கணினியிக்குத் தேவையான மின்சாரத்தினை சிறிது நேரத்திற்கு வழங்குதல்.

**15)** அளவின் அடிப்படையில் கணினியின் சரியான வகைப்படுத்தல்

(1)தனியாள் கணினி , மடிக் கணினி , உள்ளங்கைக் கணினி

(2)பொதுவான நடவடிக்கை கணினி, விசேட நடவடிக்கை கணினி


(3) இலக்கமுறைக் கணினி, ஒத்திசைக் கணினி, கலப்புக் கணினி

(4) மீக்கணினி, பெருமுகக் கணினி, சிறு கணினி

**பகுதி-2**

**01**.கீழே தரப்பட்டுள்ள கணினித் தொகுதியின் முறைவழி அமைப்பினைக் கருத்திற் கொண்டு கேட்கப்படடுள்ள வினாக்களுகு விடை தருக.

1) A,B C மற்றும் D ஆகியவற்றினைப் பெயரிடுக.
2) A யின் தொழிற்பாடு யாது?
3) Bயின் தொழிற்பாட்டுக்கு அமைய அவற்றின் வகைப்படுத்தல்களை தருக.
4) Cக்கு இரு உதாரணங்களை தருக?
5) Eயின் தொழிற்பாடு யாது?




**02** 1) பின்வருவற்றை தரவாகவும் தகவலாகவும் வேறாக்கி அட்டவனைப்படுத்துக.
(மாணவனின் பெயர், வகுப்பு நிலை , பரிசளிப்புவிழா, பாடத்திலுள்ள திறமை,சராசரிப் புள்ளி)

| தரவு | தகவல் |
|---|---|
| | |
| | |
| | |

2) தரவிற்கும் தகவலிற்கும் இடையிலான வேறுபாடு 1 இனை தருக.

3) பட்டியலிலுள்ள உபகரணங்களை மட்டும் பயன்படுத்தி அட்டவனையை பூரணப்படுத்துக.

(தெரிவிப்பி-moniter, சுட்டி-mouse, வருடி-scanner, அச்சுப்பொறி-printer, ஒலிபெருக்கி - speaker, விசைப்பலகை- keyboard)

| உள்ளீட்டு உபகரணங்கள்(input devices) | வெளியீட்டு உபகரணங்கள்(output devices) |
|---|---|
| | |
| | |
| | |